புதுச்சேரி மாநில தலைமை அலுவலகம்
38, Main Road, Oulgreat,
Near KFC Moolakulam,
Puducherry-605009,
Cell: 97505 89992,9629620802

PRGI.NO.TNTAM/25/A1635 T/PN/2025/1216/7215/1419

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS

மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்

காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 | இதழ்: 249 | 15-03-2026 | ஞாயிறு | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி- புதுச்சேரி

Volum 01 | Issue: 249 | 15-03-2026 | Sunday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy-Puducherry

## இந்தியாவில் எல்பிஜி உற்பத்தி 30% அதிகரிப்பு: மக்கள் பீதி அடைய வேண்டாம் என மத்திய அரசு அறிவிப்பு

புதுடெல்லி: மார்ச்.15–

எல்பிஜி சிலிண்டர்கள் உற்பத்தி 30 சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது. எனவே, மக்கள் பீதி அடைய வேண்டாம் என மத்திய அரசு அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

மத்திய கிழக்கில் தீவிரமடைந்துள்ள ஈரான்அமெரிக்கா, இஸ்ரேல் மோதல் காரணமாக இந்தியாவில் சமையல் எரிவாயு சிலிண்டர் (எல்பிஜி) விநியோகம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. ஹார்முஸ் ஜலசந்தி கிட்டத்தட்ட மூடப்பட்டுள்ளதால், கத்தார் மற்றும் சவுதி அரேபியா போன்ற நாடுகளில் இருந்து எல்பிஜி வருவது தடைபட்டுள்ளது.

இதனால், கடந்த சில நாட்களாக வணிக பயன்பாட்டுக்கான சிலிண்டர் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக அச்சமடைந்த மக்கள், வீட்டு உபயோக சிலிண்டருக்கான புக்கிங்கை அதிக அளவில் செய்யத் தொடங்கினர். போன் மூலம் அதிக அளவில் புக்கிங் செய்யப்படுவதால் அந்த சிஸ்டம் செயலிழந்தது. இதையடுத்து எல்பிஜி ஏஜென்சி முன்பு அதிக அளவில் பொதுமக்கள் குவியத் தொடங்கினர்.

இந்நிலையில், எல்பிஜி சிலிண்டர் உற்பத்தி 30 சதவீதம் அதிகரித்துள்ளதாகவும், மக்கள் பீதி அடைய வேண்டாம் என்றும் மத்திய அரசு நேற்று அறிவிப்பு வெளியிட்டுள்ளது. இதுகுறித்து மத்திய பெட்ரோலியத் துறை இணை செயலர் சுஜாதா சர்மா கூறியதாவது: வழக்கமாக தினந்தோறும் நாடு முழுவதும் 55.7 லட்சம் பேர் எல்பிஜி சிலிண்டர் புக்கிங் செய்வார்கள். சிலிண்டர் கிடைக்காது என்று கருதி, கடந்த சில நாட்களாக 75.7 லட்சம் பேர் சிலிண்டருக்காக புக்கிங் செய்து வருகின்றனர்.

இதையடுத்து, இந்தப் பிரச்சினையை சரி செய்யும் முயற்சியில் மத்திய அரசு தீவிரமாக இறங்கியுள்ளது. இதற்காக எல்பிஜி சிலிண்டர் உற்பத்தியை 30 சதவீதம் அதிகரித்துள்ளோம். எனவே, சிலிண்டர் கிடைக்காது என பொதுமக்கள் அச்சப்பட வேண்டாம்.

புக்கிங் செய்யும் அனைவருக்கும் காஸ் சிலிண்டர் நிச்சயம் கிடைக்கும். மக்கள் பீதி அடையாமல் இருக்கவேண்டும். மக்களுக்கு 100 சதவீத காஸ் சிலிண்டர் விநியோகம் நடைபெற்று வருகிறது. எனவே, இதுதொடர்பாக யாரும் பொய்யான தகவல்களை பரப்பி பொதுமக்களை பீதி அடையச் செய்ய வேண்டாம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## பாதுகாப்பற்ற கொள்கலனில் பெட்ரோலை சேமிப்பது அபாயம்: மத்திய அரசு எச்சரிக்கை




சென்னை: மார்ச்.15–

'நாடு முழுவதும் உள்ள அனைத்து பெட்ரோல் பங்க்குகளிலும் போதுமான அளவு பெட்ரோல் மற்றும் டீசல் கிடைக்கிறது. நுகர்வோர் பாதுகாப்பற்ற கொள்கலன்களில் பெட்ரோல் அல்லது எந்த எரிபொருளையும் எடுத்துச் செல்வது கடுமையான பாதுகாப்பு அபாயங்களை ஏற்படுத் தும்' என பெட்ரோலிய அமைச்சகம் எச்சரித்துள்ளது.

இது குறித்து பெட்ரோலிய அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், 'நாடு முழுவதும் உள்ள அனைத்து பெட்ரோல் பங்க்குகளிலும் போதுமான அளவு பெட்ரோல் மற்றும் டீசல் கிடைக்கிறது. தமிழ்நாட்டில் உள்ள ஒரு சில்லறை விற்பனை நிலையத்தில், பெட்ரோல் பாதுகாப்பற்ற கொள்கலனில் எடுத்துச் செல்லப்படுவதை அறிந்தோம், இது பாதுகாப்பற்றது.

நுகர்வோர் பாதுகாப்பற்ற கொள்கலன்களில் பெட்ரோல் அல்லது எந்த எரிபொருளையும் எடுத்துச் செல்லவோ அல்லது சேமிக்கவோ கூடாது என்று அறிவுறுத்த ப்படுகிறார்கள். ஏனெனில், இது கடுமையான பாதுகாப்பு அபாயங்களை ஏற்படுத்துகிறது. இந்த சம்பவம் நடந்த பெட்ரோல் பங்க் செயல்பாடு இடைநிறுத் தப்பட்டுள்ளதுடன், தகுந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் விநியோகிக்கும்போது பாதுகாப்பு வழிகாட்டுதல்களை கண்டிப்பாகப் பின்பற்றுமாறு அனைத்து சில்லறை விற்பனை நிலையங்கள் மற்றும் டீலர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. எந்தவொரு மீறலும் கடுமையான நடவடிக்கைக்கு வழிவகுக்கும்' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கவிஞர் வைரமுத்துவுக்கு ஞானபீட விருது அறிவிப்பு!



சென்னை: மார்ச்.15–

பிரபல கவிஞரும், பாடலாசிரியருமான வைரமுத்துவுக்கு ஞானபீட விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

கவிஞர் வைரமுத்து இதுவரை 7 முறை சிறந்த பாடலாசிரியருக்கான தேசிய விருது வென்றுள்ளார். அதுபோல, 'கள்ளிக்காட்டு இதிகாசம்' நாவலுக்கான 2003ஆம் ஆண்டு சாகித்ய அகாடமி விருது பெற்றுள்ளார். இவருக்கு 2014ஆம் ஆண்டு பத்ம பூஷன் விருது வழங்கப்பட்டது. இந்த நிலையில், அவருக்கு இப்போது ஞானபீட விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

ஞானபீட விருது அறிவிப்பு குறித்து மகிழ்ச்சி தெரிவித்த கவிஞர் வைரமுத்து, "இந்திய இலக்கியத்தின் நோபல் பரிசு என அழைக்கப்படும் ஞானபீட விருது பெறுவதில் மகிழ்ச்சி. தமிழ்க் கவிதைக்கு ஞானபீட விருது கிடைக்கவில்லை என்ற குறை என்னால் கழிந்தது. இனி புதிய பாய்ச்சலுடன் என் இலக்கிய பணி தொடரும்" எனத் தெரிவித்தார்.

பாரதிய ஞானபீட ஆய்வு மற்றும் வரலாற்று அமைப்பு கடந்த 1944ம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. இந்த அமைப்பு சார்பில் ஞானபீட விருது வழங்கப்பட்டு வருகிறது. இது இந்தியாவின் மிக உயர்ந்த இலக்கிய விருதாக கருதப்படுகிறது.

கடந்த 1965ம் ஆண்டில் கேரளாவை சேர்ந்த சங்கர குருப் என்பவருக்கு முதல் ஞான பீட விருது வழங்கப்பட்டது. இந்த ஆண்டு 60வது ஞானபீட விருது வைரமுத்துவுக்கு வழங்கப்பட்டுள்ளது. முன்னதாக, 1975ஆம் ஆண்டு 'சித்திரப்பாவை' நாவலுக்காக அகிலன் மற்றும் 2002ல் தமிழ் எழுத்தாளர் ஜெயகாந்தன் ஆகியோர் ஞானபீட விருது பெற்றுள்ளனர்.

## உணவகம், டீக்கடைகளின் கூடுதல் மின் நுகர்வில் யூனிட்டுக்கு ரூ.2 மானியம்: தமிழக அரசு அறிவிப்பு




சென்னை: மார்ச்.15–

'உணவகங்கள், டீக்கடைகள், கிளவுட் கிச்சன் உள்ளிட்ட உணவு உற்பத்தி தொழிற்கூடங்கள் எரிவாயுவுக்கு (LPG) பதிலாக மின் அடுப்புகளை பயன்படுத்தும்போது ஏற்படும் கூடுதல் மின்சார நுகர்வுக்கு, யூனிட் ஒன்றுக்கு ரூ.2 மானியம் வழங்கப்படும். ஒன்றிய அரசு அறிவித்துள்ள வணிக எரிவாயு பயன்பாட்டுக் கட்டுப்பாடுகள் அமலில் இருக்கும் காலம் வரை இந்த மானியம் வழங்கப்படும்' என தமிழக அரசு தெரிவித்துள்ளது.

இது குறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பு: 'வளைகுடா நாடுகளில் ஏற்பட்டுள்ள போர்ச்சூழல் காரணமாக தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள எரிவாயு (LPG) தட்டுப்பாட்டு இடர்பாடுகளை நீக்கி தொழில் துறை, உணவுப் பொருட்கள் உள்ளிட்ட பல்வேறு துறையினரின் தொழில் சீராக நடைபெற எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து முதல்வர் ஸ்டாலின் தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

கடந்த மாதம் பிப்ரவரி 28 அன்று அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் கூட்டுப்படைகள் ஈரான் மீது போர் தொடுத்தன. இதனைத் தொடர்ந்து ஈரான் அரசால் ஹொர்முஸ் (Hormuz) ஜலசந்தியின் வழியாக செல்லும் கப்பல்கள் தடை செய்யப்பட்டது.

இதன் காரணமாக இந்தியாவிற்கு வளைகுடா பகுதியிலிருந்து வரும் கச்சா எண்ணெய் மற்றும் எரிவாயு தடைப்பட்டது. தமிழ்நாட்டில் எரிவாயு (LPG) தட்டுப்பாடு தொடர்பாக மார்ச் 10 ஆம் தேதி முதல்வர் தொடர்புடைய துறைகளுக்கு அறிவுரை வழங்கினார். இப்பிரச்சினை தொடர்பாக, உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் மார்ச் 11ஆம் தேதி தொழில் மற்றும் வர்த்தக கூட்டமைப்பு சங்கங்கள், ஹோட்டல்கள் மற்றும் உணவகங்கள் சங்க பிரதிநிதிகளுடன் கூட்டம் நடத்தப்பட்டது.

இந்த இடர்பாடு தொடர்பாக தலைமைச் செயலாளர் மார்ச் 9, 12,13 ஆகிய நாட்களில் தொடர்புடைய துறைகளின் செயலாளர்களுடன் ஆய்வுக் கூட்டமும் நடத்தப்பட்டது. உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், தொழில் மற்றும் வர்த்தக கூட்டமைப்பு சங்கங்கள் மற்றும் தமிழ்நாடு ஓட்டல் உரிமையாளர்கள் சங்கம் ஆகியன பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்ற கோரினர். இது தொடர்பாக இன்று முதல்வர் தலைமையில் சம்பந்தப்பட்ட அரசு துறையின் உயர் அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது.

உணவகங்கள், டீக்கடைகள், கிளவுட் கிச்சன் உள்ளிட்ட உணவு உற்பத்தி தொழிற்கூடங்கள் எரிவாயுவிற்கு (LPG) பதிலாக மின்அடுப்புகளை பயன்படுத்தும் போது ஏற்படும் கூடுதல் மின்சார நுகர்விற்கு, யூனிட் ஒன்றுக்கு ரூ.2 மானியம் வழங்கப்படும். ஒன்றிய அரசு அறிவித்துள்ள வணிக எரிவாயு பயன்பாட்டுக் கட்டுப்பாடுகள் அமலில் இருக்கும் காலம் வரை இந்த மானியம் வழங்கப்படும்.

எரிவாயு (LPG) பயன்படுத்தும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் நெருக்கடியை சமாளிக்கும் வகையில் மின் அடுப்புகள் மின் சூடேற்றிகள் உள்ளிட்ட மின் உபகரணங்கள் கொள்முதல் செய்வதற்கு இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் (UYEGP) கீழ், 25 சதவிகிதம் / அதிகபட்சமாக 3.75 லட்சம் ரூபாய் மானியத்துடன் கடன் வழங்கவும், தமிழ்நாடு மகளிர் தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 25 சதவிகிதம் / 2 லட்சம் ரூபாய் மானியத்துடன் 10 லட்சம் ரூபாய் வரை கடன் வழங்கவும் மற்றும் அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டத்தின் கீழ் 35 சதவிகிதம் / அதிகபட்சமாக 1 கோடி ரூபாய் வரை மானியத்துடனும் கடன் வழங்கவும் ஆணையிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் 60,698 தொழிற்சாலைகள் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் இசைவாணையினை பெற்று, எல்பிஜி., சிஎன்ஜி, டீசல், பர்னஸ் ஆயில், விறகு போன்றவற்றை எரிப்பொருளாக பயன்படுத்தி இயங்கி வருகின்றது. இந்நிறுவனங்கள் எல்பிஜி., சிஎன்ஜி, போன்ற எரிபொருட்களுக்கு மாற்றாக மண்ணெண்ணை, ஆர்டிஎஃப், எச்எஸ்டி, பயோமாஸ் போன்றவற்றை எரிபொருளாக பயன்படுத்திக் கொள்ளலாம் எனவும், இதற்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் இசைவாணை (CTE/CTO) பெற தேவையில்லை, தகவல் தெரிவித்தால் மட்டும் போதுமானது எனவும், ஒன்றிய அரசு அறிவித்துள்ள எல்பிஜி., சிஎன்ஜி பயன்பாட்டுக் கட்டுப்பாடுகள் கால அவகாசம் வரை இந்த விலக்கு அமலில் இருக்கும் எனவும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முழுவதும் 9,300 தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் வாயிலாக நாள் ஒன்றுக்கு 55 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்து கையாளும் திறன் உள்ளது. இந்த இடர்பாட்டினால் மீதமாகும் தேவைக்கு அதிகமான பாலினை பால் உற்பத்தியாளர்களிடமிருந்து ஆவின் பால் கூட்டுறவு சங்கங்களில் கட்டுப்பாடுகள் ஏதுமின்றி பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க ஆணையிடப்பட்டுள்ளது. எரிவாயு (LPG) பற்றாக்குறையால் உணவகங்கள் மூடப்படும் வேளையில் விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் காய்கறி விற்பனை பாதிக்கப்படலாம்.

விவசாயிகளின் வாழ்வாதாரத்தினை கருத்தில் கொண்டு விவசாயிகளை தாங்கள் விளைவித்த காய்கறிகள் மற்றும் பழங்களை இடர்பாடின்றியும், 194 உழவர் சந்தைகளில் எவ்வித கட்டுப்பாடு இல்லாமல் விற்பனை செய்ய அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

மேலும், மாநில அளவில் வணிக நிறுவனங்களுக்கு முறையாக எல்பிஜி சிலிண்டர் அளவீட்டினை ஒதுக்கீடு செய்து கண்காணிக்க தலைமைச் செயலாளர் அவர்கள் கண்காணிப்பில் அரசு உயர் அலுவலர்கள் கொண்ட குழு செயல்படவும், இதேபோன்று மாவட்ட அளவில் எண்ணெய் விநியோக நிறுவனங்களின் பொறுப்பு அலுவலர்களை உள்ளடக்கிய மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலான குழு கண்காணிக்கவும் முதல்வர் ஆணையிட்டுள்ளார்.

இத்துடன், இந்த மாதம் பொது விநியோக திட்டத்திற்கு கூடுதலாக 3228 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்க ஆணையிடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கூட்டணிக் கட்சிகளுடனான தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தையை அதிமுக நாளை அதிகாரப்பூர்வமாக தொடங்கவுள்ளது

கூட்டணிக் கட்சிகளுடனான தொகுதிபங்கீடுபேச்சுவார்த்தையை அதிமுக நாளை அதிகாரப்பூர்வமாக தொடங்கவுள்ளது. பாஜக, பாமக, அமமுக அதிக தொகுதிகளைக் கேட்கும் நிலையில் நாளைமறுநாள்பேச்சுவார்த்தையை தொடங்க திட்டம். அதிமுக செல்வாக்காக உள்ள சட்டமன்றத் தொகுதிகளை குறிவைத்து பாஜக கேட்பதால் இழுபறி. கூட்டணி தலைவர்களுடன் அதிமுக ஏற்கனவே 2 முறை பேச்சு நடத்தியும் உடன்பாடு எட்டப்படவில்லை

## புதிய நியாய விலை கடை திறந்து வைப்பு - 227 நபர்களுக்கு விலை இல்லா வீட்டு மனை பட்டா வழங்கல்..

### ஈரோட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அமைச்சர் சு. முத்துசாமி வழங்கினார்..




ஈரோடு. மார்ச். 15

ஈரோடு மாநகராட்சி பகுதிகளில் நடைபெற்ற பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு அமைச்சர் முத்துசாமி புதிய நியாய விலைக் கடையை திறந்து வைத்தும் பொது மக்களுக்கு விலை இல்லா வீட்டுமனை பட்டாக்களையும் வழங்கி சிறப்பித்தார்.

ஈரோடு மாநகராட்சி பகுதிகளுக்கு உட்பட்ட ரங்கம் பாளையம் மற்றும் கிருஷ்ணம் பாளையம் பகுதிகளில் வருவாய்த்துறை மற்றும் பொது விநியோக த் திட்டத்தின் மூலம், பொதுமக்களுக்கு விலையில்லா இலவச வீட்டு மனை பட்டா வழங்கப்பட்டது. அதோடு புதிய நியாய விலைக் கடை திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் பங்கேற்று அமைச்சர் சு. முத்துசாமி புதிய நியாய விலை கடையை திறந்து வைத்தும், ஈரோடு வட்டாட்சியர் அலுவலகம் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட விலையில்லா வீட்டு மனை பட்டா 27 நபர்களுக்கும் அமைச்சர் முத்துசாமி வழங்கி சிறப்பித்தார்.

இந்த நிகழ்ச்சிகளில் ஈரோடு கிழக்குத் தொகுதி எம்எல்ஏ வி. சி சந்திரகுமார் மாவட்ட வருவாய் அலுவலர் சு. சாந்தகுமார், ஈரோடு வட்டாட்சியர் முத்துகிருஷ்ணன், வார்டு கவுன்சிலர் இபி ரவி உள்ளிட்ட அதிகாரிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



சேலம் மாவட்டம்,கொண்டப்பநாயக்கன்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ரூ.10.30 இலட்சம் மதிப்பில் பள்ளி திறந்தவெளிப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள இரும்பு தகடு மேற்கூரை,ரூ.2.33 இலட்சம் மதிப்பில் மைதானத்திற்கு அமைக்கப்பட்டுள்ள சிமெண்ட் கான்கிரீட் தளம்,ரூ.5.37 இலட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள மாணவ,மாணவியர் உணவு அருந்தும் கூடம் மாவட்ட ஆட்சியரின் விருப்புரிமை நிதி திட்டத்தின் கீழ் 5.95 லட்சம் மதிப்பில் பள்ளி மேம்பாட்டு உட்கட்டமைப்புகள் ஆகியவற்றை பள்ளி மாணவ,மாணவியர்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்த அமைச்சர் ஆர் ராஜேந்திரன்.இந்நிகழ்வில் சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் இரா.பிருந்தாதேவி,சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி மற்றும் ,துறை சார்ந்த அதிகாரிகள்,ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் சார்பாக நடைபெற்ற "பசுமை சாம்பியன் விருது



கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் சார்பாக நடைபெற்ற "பசுமை சாம்பியன் விருது 2025 போட்டிகளில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளில் எடுத்துக்காட்டாக செயல்பட்டு சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தி, பசுமை வளர்ச்சி மற்றும் நிலைத்த வளர்ச்சிக்கான சிறப்பாக பங்களிப்பு மேற்கொண்ட குளோபல் கால்சியம் நிறுவனம் தொழிற்சாலைகள் பிரிவு. கென்னத் ஆண்டர்சன் நேட்சர் சொசைட்டி தன்னார்வ தொண்டு நிறுவனம் மற்றும் ஆர்.வி.அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி கல்வி துறை பிரிவு ஆகியவற்றிற்கு ரூ.1 இலட்சம் மதிப்பிலான காசோலை மற்றும் விருதுகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.தினேஷ் குமார் இ.ஆ.ப. அவர்கள் அன்று 12.03.2026 வழங்கினார். உடன் மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர் . முத்துராஜ் உள்ளார்.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி போதைப்பொருள் எதிர்ப்பு மன்றங்கள் மூலம் சிறப்பாக செயல்பட்ட பள்ளி, கல்லூரிகளுக்கு பரிசு மற்றும் பாராட்டுச்சான்றிதழ்களை வழங்கினார்.

# தெள்ளார் ஸ்ரீ ராகவேந்திரா மெட்ரிக் பள்ளியில் கிண்டர் கார்டன் பட்டமளிப்பு விழா..!




வந்தவாசி , மார்ச் 15:

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த தெள்ளார் ஸ்ரீ ராகவேந்திரா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் கிண்டர் கார்டன் மாணவர்களுக்கு பட்டமளிப்பு விழா நடைபெற்றது. இந்த நிகழ்விற்கு பள்ளி முதல்வர் சி. ஏழுமலை தலைமை தாங்கினார். துணை முதல்வர் ப. முருகன் வரவேற்றார்.

சிறப்பு அழைப்பாளராக, தெள்ளார் வட்டார மருத்துவ அலுவலர் ஹித்தேன் டி ஷா பங்கேற்று சிறப்புரை ஆற்றி, மாணவர்களுக்கு பட்டச்சான்றிதழ்களை வழங்கினார்.மேலும் இந்த நிகழ்ச்சியில் தெள்ளார் ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்கள் ஆர். ராகஸ்ரீ, டி.எச்.பிரசாத் உள்ளிட்டோர் பங்கேற்று வாழ்த்துரை வழங்கினர். மேலும் இந்த நிகழ்ச்சியில் பள்ளி ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் பங்கேற்றனர். மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது . இறுதியில் பள்ளி ஆசிரியை சந்தியா நன்றி கூறினார்.

# திருவள்ளூர் மாவட்டத்தில் இன்று ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தொகுதி II (ம) II (அ) பதவிகளுக்கான எழுத்துத் தேர்வு : மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தகவல்

திருவள்ளூர் மார்ச் 15 :

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தொகுதி II (ம) II (அ) பதவிகளுக்கான எழுத்துத் தேர்வு எதிர்வரும் 15.03.2026 (ஞாயிற்றுக்கிழமை) முற்பகல் மற்றும் பிற்பகல் நடைபெற உள்ளது. இத்தேர்வினை திருவள்ளூர் மாவட்டத்தில் திருவள்ளூர் வட்டத்தில் உள்ள ஸ்ரீநிகேதன் மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப் பள்ளி தேர்வு மையத்தில் முற்பகல் 120 தேர்வர்களும், பிற்பகல் 124 தேர்வர்களும் தேர்வு எழுத உள்ளனர்.

மேலும், தேர்வில் கலந்து கொள்ளும் மாற்றுத்திறனாளிகளுக்கு தரைத்தளத்தில் தேர்வு எழுத வசதியும், பார்வையற்றோர் தேர்வு எழுதிட, மாற்று நபர் மற்றும் தனி அறைகள் கொண்ட வசதியும் தேர்வுக் கூடத்தில் அமைக்கப்பட்டுள்ளது. தேர்வுக் கூடத்தில் தனித்தனியாக காவலர் பாதுகாப்புக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், தேர்வுகள் சிறப்பாக நடைபெற ஒரு தலைமை கண்காணிப்பாளர், ஒரு இயக்க குழு அலுவலர், மாவட்ட வருவாய் அலுவலர் தலைமையில் பறக்கும் படை குழு நியமனம் செய்யப்பட்டுள்ளனர். தேர்வில் பங்கேற்கும் தேர்வர்கள் தேர்வு மையத்திற்கு எளிதில் சென்றடையும் வகையில் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் மாநகர போக்குவரத்துக் கழகம் மற்றும் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (விழுப்புரம்) லிமிடெட், திருவள்ளூர் மண்டலம் மூலம் போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி, முற்பகல் தேர்வு எழுத வரும் தேர்வர்கள் சரியாக காலை 8.30 மணிக்குள்ளும் மற்றும் பிற்பகல் தேர்வு எழுத வரும் தேர்வர்கள் சரியாக 1.30 மணிக்குள்ளும் தேர்வு கூடத்தில் இருக்க வேண்டும். மேலும் காலை 9.மணி மற்றும் பிற்பகல் 2 மணிக்குள் தேர்வு கூடத்திற்கு வராதவர்கள் தேர்வாணைய அலுவலர்களால் தேர்வு எழுத அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் மாற்றுத்திறனாளிகளுக்கு தேர்வு நேரம் முடிந்தும் கூடுதலாக ஒரு மணி நேரம் வழங்கப்படும் என திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தெரிவித்துள்ளார்.

# அரசு அலுவலகங்களில் மகளிருக்கு வசதி தேவை: முதல்வருக்கு கோரிக்கை

சென்னை: மார்ச்.15–

தமிழ்நாடு அரசு அலுவலக உதவியாளர்கள் மற்றும் அடிப்படை பணியாளர்கள் மாநில மைய சங்கம் சார்பில் 'உலக மகளிர் தின விழா' இன்று நடைபெற்றது. மாநில தலைவர் எஸ்.மதுரம் தலைமை தாங்கினார். அகில இந்திய தலைவர் கே.கணேசன் முன்னிலை வகித்தார். மாநில மகளிர் அணி செயலாளர் அ.ஆபிதம்மாள் அனைவரையும் வரவேற்றார்.

இந்த கூட்டத்தில் நிறைவேற்றப்பட் தீர்மானம் குறித்து கே.கணேசன் நிருபர்களிடம் கூறியதாவது: தமிழ்நாட்டில் உள்ள அனைத்து துறைகளிலும் பணியாற்றுகின்ற மகளிர்களுக்கு உணவருந்தும் அறை, உடை மாற்றும் அறை, குழந்தைகளுக்கு பாலூட்டும் அறை தனியாக வழங்க முதல்வர் நடவடிக்கை எடுக்க வேண்டும். பல்நோக்கு மருத்துவ பணியாளர்கள், பூங்கா மற்றும் பண்ணை பணியாளர்கள், செவிலியர்கள், டெங்கு கொசு ஒழிப்பு பணியாளர்கள், மருத்துவமனை பணியாளர்கள், ஆய்வக உடனாளர்கள், சத்துணவு அங்கன்வாடி பணியாளர்கள், ஊராட்சி, நகராட்சி, பேரூராட்சி, மாநகராட்சிகளில் பல்வேறு துறைகளில் பணியாற்றும் மகளிர்களுக்கு உரிய மரியாதை வழங்க வேண்டும்.

முதல்வர் பெண்களுக்கென பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். அதுபோல் தமிழக அரசியல் பணி அமர்த்தப்படும் மகளிர்களை தனியார் மயம் ஒப்படைக்காமல் அரசு பணியாளர்களாக அல்லது தினக்கூலி பணியாளர்களாக நியமனம் செய்திட வேண்டும். மத்திய, மாநில அரசுகள் தங்கள் அரசு பணிகளில் மகளிர்களுக்கு 50 சதவீதம் பணியிடம் வழங்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

# அதிக விலைக்கு சிலிண்டர் விற்ற காஸ் ஏஜென்சிக்கு சீல்: திருப்பூரில் அதிகாரிகள் அதிரடி

திருப்பூர்: திருப்பூர் பல்லடம் ரோடு, வீரபாண்டி அடுத்த வாய்க்கால் மேடு பஸ் ஸ்டாப்பில் உள்ள தனியார் காஸ் ஏஜென்சியில் அதிக விலைக்கு வணிக பயன்பாட்டு சிலிண்டர் விற்கப்படுவதாகவும், பதுக்கி வைத்திருப்பதாகவும் மாவட்ட வழங்கல் துறைக்கு புகார் வந்தது. அதன்பேரில் மாவட்ட வழங்கல் அலுவலர் சரவணன் நேற்று சோதனை நடத்த சென்றார். அப்போது உரிமையாளர் நீண்ட நேரமாக ஏஜென்சிக்கு வராமல் காலம் தாழ்த்தி வந்துள்ளார். மேலும், அதிகாரிகள் போன் மூலம் தொடர்பு கொண்டு உடனடியாக கடைக்கு வரவேண்டும் என அழைப்பு விடுத்தனர். அப்போதும் தாமதப்படுத்தியுள்ளார். சந்தேகமடைந்த அதிகாரிகள், காஸ் ஏஜென்சிக்கு சீல் வைத்தனர். தொடர்ந்து சிலிண்டர்களை பதுக்கினாலோ, கூடுதல் விலைக்கு விற்பனை செய்தாலோ கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட வழங்கல் அலுவலர் எச்சரித்துள்ளார். இந்த சம்பவம் திருப்பூரில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# சேலத்தில் கணவருடன் தகராறால் தீக்குளித்த பெண் சாவு.

சேலம் பள்ளப்பட்டி ஜவகர்மில் சந்து பகுதியை சேர்ந்தவர் கோபி(43).இவரது மனைவி பாக்கியலட்சுமி (38).மதுகுடிக்கும் பழக்கம் கொண்ட கோபி,தினமும் மனைவியிடம் தகராறில் ஈடுபடுவார். கடந்த 3ஆம்தேதி இவ்வாறு தகராறு ஏற்பட்டதால் பாக்கியலட்சுமி உடலில் தின்னரை ஊற்றி தீ வைத்து கொண்டார். படுகாயம் அடைந்த அவரை மீட்டு சேலம் அரசு மருத்துவமனையில் சேர்த்தனர்.அங்கு சிகிச்சை பலனின்றி நேற்று இறந்து போனார். இதுகுறித்து பள்ளப்பட்டி போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கோவையில் உக்கடம் பேருந்து நிலையம் திறப்பு விழா!!



கோவை மார்ச்:15

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னை,தலைமைச் செயலகத்திலிருந்து காணொளிக்காட்சி வாயிலாக,கோயம் புத்தூர் மாநகராட்சியில்,ரூ.13.00 கோடி மதிப்பீட்டில் நவீன மயமாக்கப்பட்ட உக்கடம் பேருந்து நிலையத்தினை (முனையம்1) திறந்து வைத்தார்கள்.அதனைத் தொடர்ந்து,உக்கடம் பேருந்து நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில்,மாவட்ட ஆட்சித்தலைவர் பவன் குமார் க.கிரியப்பனவர் பேருந்துகளை கொடியசைத்து துவக்கி வைத்து,பேருந்தில் பயணம் செய்தார்.

உடன் மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன் மாநகராட்சி ஆணையாளர் மா.சிவகுரு பிரபாகரன் துணை மேயர் ரா. வெற்றிசெல் வன்,மாநகராட்சி தலைமைப் பொறியாளர் விஜயகுமார், துணை தலைமைப் பொறியாளர் இளங்கோவன்,மண்டல தலைவர்கள் மீனாலோகு (மத்தியம்), கே.ஏ.தெய்வயானைதமிழ்மறை(மேற்கு), ரெ.தனலட்சுமி(தெற்கு), நிலைக் குழுத் தலைவர்கள் வி.பி.முபசீரா சாந்தி முருகன், உதவி ஆணையர் கணேசன்,உதவி செயற்பொறியாளர் குமரேசன், மண்டல சுகாதார அலுவலர் குணசேகரன்,மாமன்ற உறுப்பினர் மனோகரன், உதவி பொறியாளர் சதீஷ்குமார், மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# இ.எஸ் கல்வியல் கல்லூரியில் ஆங்கிலம் பேசுவதற்கான மொழி திறன் பயிற்சி துவக்க விழா



விழுப்புரம் மார்ச் 15

விழுப்புரம் இ.எஸ் கல்வி குழுமத்தின் ஓர் அங்கமான இ.எஸ் கல்வியியல் கல்லூரியில் ஆங்கிலம்பேசுவதற்கான மொழி திறன் பயிற்சிக்கான துவக்க விழா நடைபெற்றது .

நிகழ்ச்சிக்கு இ எஸ் கல்வி குழுமத்தின் தலைவர் செல்வமணி தலைமை தாங்கி பயிற்சியை துவக்கி வைத்தார். கல்லூரி முதல்வர் முனைவர் செந்தில்முருகன் அனைவரையும் வரவேற்றார். சிறப்பு அழைப்பாளர்களாக விழுப்புரம் அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி இணை பேராசிரியர் சத்யா விரிவுரையாளர்கள் வேலவதாஸ் , முன்னாள் கல்லூரி மாணவி அனுசுயா, எஸ்.எம்.வி இ.சி கல்லூரி துணை பேராசிரியர் நந்தினி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

இதில் மாணவர்களுக்கு தகவல் தொடர்புத்திறன் வளர்ப்பு முறைகள் தகவல் தொடர்பின் வகைகள் கடினத்திறன் மற்றும் மென்மையான திறன்கள் வளர்த்துக் கொள்வது பற்றி பயிற்சி அளிக்கப் பட்டது.

நிகழ்ச்சியில் இ எஸ் கல்வியல் கல்லூரி துணைபேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழக நிறுவனத்தலைவர் புரட்சித்தலைவர் விநிஸி மற்றும் புரட்சித்தலைவி அம்மா அருளாசியுடன் கழக பொதுச்செயலாளர் புரட்சித்தமிழர் எடப்பாடியார் அவர்களின் அருள் ஆசியுடன் முன்னாள் சட்டத்துறை அமைச்சர் விழுப்புரம் மாவட்ட கழக செயலாளர் CVe.சண்முகம் BA,BL,MP அவர்கள் வழிகாட்டுதலின்படி செஞ்சி சேவல் வெ.ஏழுமலை B.Com,BL, Ex:MLA, Ex:MP. அவர்கள் கெங்கவரம் கிராமத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ விநாயகர் ஸ்ரீபாலமுருகன் ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலய அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மற்றும் கழக நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.

## புதுச்சேரி இந்திரா நகர் தொகுதியில் ரூ.3.28 கோடி மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்கள்: முதல்வர் ரங்கசாமி பூமி பூஜை செய்து தொடங்கி வைத்தார்!





புதுச்சேரி: மார்ச்.15–

புதுச்சேரி இந்திரா நகர் தொகுதிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் சுமார் 3 கோடியே 28 லட்சம் ரூபாய் மதிப்பிலான புதிய சிமெண்ட் சாலைகள் மற்றும் கலைவரங்கம் அமைப்பதற்கான பூமி பூஜைவிழா நடைபெற்றது.

புதுச்சேரி முதலமைச்சர் N. ரங்கசாமி அவர்கள் தலைமை தாங்கி, பணிகளைப் பூமி பூஜை செய்து தொடங்கி வைத்தார். புதுச்சேரி அரசு கொறடா மற்றும் இந்திரா நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் . V. ஆறுமுகம் (எ) A.K.D அவர்கள் முன்னிலை வகித்து சிறப்பித்தனர்.

முத்திரையர் பாளையம் பகுதி: ஜீவா வீதி முதல் அகத்தியர் கோட்டம் வரை சிமெண்ட் சாலை அமைக்கும் பணி மதிப்பு: ரூ.1.48 கோடி.

மாரியம்மன் கோவில் வீதி பகுதி: மாரியம்மன் கோவில் வீதி மற்றும் இளங்கோ அடிகள் வீதிகளில் புதிய சிமெண்ட் சாலை அமைக்கும் பணி மதிப்பு: ரூ.74.13 லட்சம்.

பஜனை மடத்து வீதி பகுதி: முத்திரையர் பாளையம் பஜனை மடத்து வீதி பகுதியில் புதிய சிமெண்ட் சாலை அமைக்கும் பணி மதிப்பு: ரூ.69.36 லட்சம்.

சாணாரப்பேட்டை பகுதி: இப்பகுதியில் புதிதாக கலைவரங்கம் (Community Hall) அமைப்பதற்கான பணி மதிப்பு: ரூ.36.20 லட்சம்.

இந்த நிகழ்ச்சியில் அரசு அதிகாரிகள், ஊர் முக்கியஸ்தர்கள் மற்றும் பொதுமக்கள் பெருமளவில் கலந்து கொண்டனர். தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, இந்த மேம்பாட்டுப் பணிகள் விரைவாகத் தொடங்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பிச்சைக்காரன்பேட்டில் மாசி பெருவிழா சிறப்பாக நடைபெற்றது





புதுச்சேரி, மார்ச்.15–

உழவர்கரை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பிச்சைக்காரன்பேட் பகுதியில் எழுந்தருளி அருள்பாலிக்கும் அருள்மிகு ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி மற்றும் ஸ்ரீ எல்லை புற்று காளியம்மன் ஆலய மாசி பெருவிழா மிகுந்த பக்தி பூர்வமாகவும் சிறப்பாகவும் நடைபெற்றது.

விழாவை முன்னிட்டு அருள்மிகு ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி மற்றும் ஸ்ரீ எல்லை காளியம்மனுக்கு மகா கணபதி ஹோமம் நடைபெற்றது. தொடர்ந்து புற்று காளியம்மனுக்கு விசேஷ தீபாராதனை செய்யப்பட்டது. பின்னர் சாமி சாவே வார்த்தையில் எழுந்தருளி உற்சவமாக ஊர்வலமாக நடத்தப்பட்டது.

மேலும் விழாவின் ஒரு பகுதியாக அக்னி சட்டி எடுத்தல் மற்றும் கும்பம் கொட்டுதல் போன்ற பாரம்பரிய நிகழ்ச்சிகளும் மிகச் சிறப்பாக நடைபெற்றன.

இந்த விழாவில் சிறப்பு அழைப்பாளராக சமூக சேவகி முனைவர் லாவண்யா அம்மா கலந்து கொண்டார். அவருக்கு கோயில் நிர்வாகம் சார்பாக பரிவட்டம் கட்டி சிறப்பு மரியாதை வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் ஊர் பொதுமக்கள் மற்றும் பக்தர்கள் திரளாக கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

விழா நிறைவில், கோயில் நிர்வாகம் மற்றும் ஊர் பொதுமக்கள் சார்பாக சமூக சேவகி முனைவர் லாவண்யா அம்மாவிற்கு அனைவரும் மனமார்ந்த நன்றி தெரிவித்தனர்.

## ஒருதலைக் காதல் கொடூரம்: பெண்ணை பெட்ரோல் ஊற்றி எரித்த இளைஞர்



புதுச்சேரி ஒதியஞ்சாலை காவல் நிலையம் அருகே ஒருதலைக் காதல் காரணமாக பெண்ணை பெட்ரோல் ஊற்றி எரித்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.நேதாஜி நகர் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர், அதே பகுதியை சேர்ந்த பெண்ணின் மீது பெட்ரோல் ஊற்றி தீ வைத்ததாக கூறப்படுகிறது. படுகாயமடைந்த அந்த பெண் உடனடியாக புதுவை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். சம்பவம் குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்....

## கரூர்சதுரங்க விளையாட்டு மாவட்ட செயலாளர் மீது விளையாட்டு வீரர்களும் பள்ளியில் படிக்கும் சதுரங்க விளையாட்டு மாணவ, மாணவிகளும் பாதிப்படைகின்றனர் : அரசு துரித நடவடிக்கை எடுக்க கோரிக்கை

கரூர். மார்ச். 15–

தமிழ்நாடு அரசு மிக சிறப்பான முறையில் விளையாட்டுத் துறையையும், விளையாட்டு வீரர்களையும், விளையாட்டு சங்கங்களையும் ஊக்குவித்து சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் உள்ள சதுரங்க வீரர்கள் உலக அளவில் சாதித்து வருகிறார்கள், கரூர் மாவட்டத்தில் பல சதுரங்க கிளப்புகள் செயல்பட்டு கொண்டுள்ளது.

கரூர் மாவட்டத்தில் சதுரங்க சங்கம் பல ஊழலில் ஈடுபட்டு வருகிறது. 2024 ஆம் ஆண்டு கரூர் மாவட்ட சதுரங்க சங்கம் முறையாக பதிவு செய்யப்பட்டது. அதற்கு முன்பு வரை இவை பதிவு செய்யப்பட்டும் புதுப்பிக்கப்படவில்லை.விளையாட்டு சங்கங்கள் மாவட்டம், மாநில அளவில் செயல்படும் போது உரிய முறையில் உறுப்பினர்கள் கூட்டங்களை நடத்தி வருடாந்திர கணக்கு வழக்குகளை தெரிவிப்பார்கள். கரூர் மாவட்ட சதுரங்க சங்கம் யாருக்கும் எதையும் தெரிவிப்பதில்லை.

சதுரங்க சங்கத்தில் பல லட்சம் பணம் இருந்தும் அந்த பணத்தை விளையாட்டு வீரர்களின் நலனுக்காக பயன்படுத்துவது இல்லை.இந்தப் பணத்தை முறையாக சதுரங்க விளையாட்டு வீரர்களுக்கும் சங்க வளர்ச்சிக்கும் பயன்படுத்த வேண்டும் என்று ஏற்கனவே விதி உள்ளது. தற்போது கரூர் மாவட்டத்தில் உள்ள ஸ்மார்ட் செஸ் அகாடமி சேர்ந்த தலைவர் மணிகண்டன் என்பவர் சதுரங்க விளையாட்டை வியாபாரம் ஆக்கிவிட்டார்.இவர் ஒரு வருடத்திற்கு 10 முறைக்கு மேல் போட்டிகளை மாவட்ட, மாநில, தேசிய மற்றும் சர்வதேச அளவில் நடத்தி வருகிறார்.

இதை கரூர் மாவட்ட சதுரங்க சங்கம் பணத்திற்காக ஊக்குவித்து வருகிறது.இவரால் மற்ற சதுரங்க கிளப்புகள் போட்டியை நடத்த முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது. இவர் மட்டும் போட்டியை கரூரில் நடத்த வேண்டும் என்று நினைக்கிறார். சதுரங்கப் போட்டி ஒருவர் நடத்துகின்றார் என்றால் மாநில மற்றும் மாவட்ட சங்கத்திற்கு ஒரு குறிப்பிட்ட தொகையை வழங்க வேண்டும்.

அப்பொழுதுதான் மாநிலம் மற்றும் மாவட்ட சங்கமானது போட்டியை நடத்துவதற்கு அனுமதி வழங்கும். கரூர் மாவட்டத்தில் நடைபெறும் சதுரங்க போட்டியை பார்த்து பிற மாவட்டத்தில் உள்ள சங்கங்கள் கேள்வி எழுப்பியுள்ளது.

இதைக் வன்மையாக கண்டித்து அரசுக்கு தெளிவான கருத்துரை அனுப்பப்பட்டுள்ளது.

மணிகண்டன் பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் செயல்படுவது வேதனையாக உள்ளது. இதை மாநில மற்றும் மாவட்ட சதுரங்க சங்கம் ஏன் கண்டிக்கவில்லை. எப்படி இத்தனை முறை போட்டிக்கு அனுமதி கொடுத்தீர்கள்.கரூர் மாவட்டத்தில் உள்ள பிற சதுரங்க கிளப்புகள் போட்டியை நடத்தினால் சதுரங்க போட்டியை நடத்தக்கூடிய சதுரங்க நடுவர்களை மணிகண்டன் போன் செய்து இந்த போட்டியை நடத்த நீங்கள் வர வேண்டாம் என்று சொல்லி வருகிறார். இது மிக வெட்கக்கேடான விஷயம்.மணிகண்டன் என்பவர் யார் இவர் எவ்வாறு சதுரங்க போட்டிக்குள் உள்ளே வந்தார். தற்பொழுது சதுரங்க விளையாட்டை அழித்து வருகிறார்.கரூர் மாவட்டத்தில் சதுரங்க விளையாட்டை வளர்ப்பதற்கு பல கிளப்புகள் செயல்பட்டுக் கொண்டு உள்ளது. மணிகண்டன் அவர்கள் பணம் மட்டுமே குறிக்கோள் என்று சதுரங்க விளையாட்டை கரூர் மாவட்டத்தில் கேவலப்படுத்தி வருகிறார். மக்கள் மற்றும் சதுரங்க விளையாட்டு வீரர்கள் பணத்தை வெளிப்படையாக திருடி வருகிறார். இவர் நடத்தும் போட்டியில் நுழைவு கட்டணம் மிக மிக அதிகமாக வசூலிக்கப்படுவது வேதனை அளிக்கிறது.

எனவே கரூர் மாவட்டத்தில் உள்ள சதுரங்க விளையாட்டு வீரர்களும் பள்ளியில் படிக்கும் சதுரங்க விளையாட்டு மாணவ, மாணவிகளும் கவனமாக இருக்க வேண்டும். இது போல் நடத்தப்படும் போட்டியில் கலந்து கொள்ள வேண்டாம். உங்கள் பணத்தை விரயம் செய்யாதீர்கள் என்று உங்களிடம் பணிவுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.கரூர் மாவட்ட சதுரங்க சங்கத்தில் நடைபெறும் தில்லு முல்லுகள் மணிகண்டனை போன்றவரை ஊக்குவிப்பது எல்லாம் நாங்கள் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க மாட்டோம். கண்டிப்பாக இவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கும் வரை ஓயமாட்டோம். மணிகண்டனால் கரூரில் உள்ள பல சதுரங்க கிளப்புகள் வீணாகிக் கொண்டு வருகிறது.

மணிகண்டன் அவர்கள் கடந்த 15 ஆண்டுகளாக சதுரங்க விளையாட்டு போட்டியை நடத்தி பல லட்சங்கள் சம்பாதித்து உள்ளார்.மணிகண்டன் அவர்கள் கரூர் மாவட்டத்தில் போட்டியை நடத்துவதற்கு நுழைவு கட்டணமாக 500 முதல் 2000 வரை பெறுகிறார்.இவ்வளவு பணம் பெற உங்களுக்கு அனுமதி வழங்கியது யார். யாருக்கெல்லாம் பங்கு செல்கிறது. உங்களுக்கு அசிங்கமாக இல்லையா.

பணம் சம்பாதிக்க வேண்டுமென்றால் ஏகப்பட்ட வலி இருக்குது. தொழில் செய்யுங்கள், விவசாயம் செய்யுங்கள், கூலி வேலை செய்யுங்கள், ஆனால் விளையாட்டை பயன்படுத்தி பணம் சம்பாதிப்பதை நாங்கள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்.

இத்தனை விளையாட்டுப் போட்டியை பணத்துக்காக நடத்திவிட்டு நாங்கள் விளையாட்டு வீரரின் வளர்ச்சிக்காக நடத்துகிறோம் என்று நாவு கூசாமல் பொய் சொல்கிறீர்கள். எத்தனை சர்வதேச விளையாட்டு வீரர்களை கரூர் மாவட்டத்தில் உருவாக்கிய உள்ளீர்கள். அவர்கள் பணத்தை திருடுவது மட்டுமே உங்களுடைய நோக்கம். கரூர் மாவட்டத்தில் சதுரங்க விளையாட்டு சங்கம் அழிவு பாதை நோக்கி சென்று கொண்டு இருக்கிறது. இதை நீங்கள் நிறுத்தவில்லை என்றால் உரிய முறையில் நடவடிக்கை எடுக்கப்படும். அனைத்து ஆதாரங்களும் கடந்த 10 ஆண்டுகளாக சேகரிக்கப்பட்டுள்ளது. இவை அனைத்தும் தேசிய, மாநில சங்கத்திற்கும் தமிழ்நாடு அரசின் முதலமைச்சர் கவனத்திற்கும், விளையாட்டுத்துறை அமைச்சர் கவனத்திற்கும் மாண்புமிகு மக்கள் அமைச்சர் செந்தில் பாலாஜி அவர்களுக்கு கவனத்திற்கும் உரிய ஆதாரத்துடன் எடுத்துச் செல்லப்பட்டு இவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். கரூர் சதுரங்க விளையாட்டு மாவட்ட செயலாளர் அவர்கள் இவருக்கு தெரிந்தவர்களுக்கு மட்டுமே பதவி கொடுத்து வைத்திருக்கிறார். இவை அனைத்துமே நீதிமன்றத்தின் மூலம் முறியடிக்கப்படும். இது சம்பந்தமாக மதுரை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்படும் என்று விளையாட்டு வீரர் மற்றும் வீராங்கனைகள் பெற்றோர்கள், விளையாட்டு சமூக ஆர்வலர்கள் சார்பாக கேட்டுக்கொள்கின்றோம்.

## விழுப்புரத்தில் பிளஸ் 2 தேர்வில் மாணவர்களை கண்காணிக்க தவறிய 5 ஆசிரியர்களுக்கு நோட்டீஸ்

### மாவட்ட கல்வி அலுவலர் நடவடிக்கை

விழுப்புரம்: மார்ச்.15–

தமிழகம் முழுவதும் கடந்த 2ம் தேதி முதல் 12ம் வகுப்பு தேர்வுகள் தொடங்கி நடைபெற்று வருகிறது. வரும் 26ம் தேதி தேர்வு நிறைவு பெறுகிறது. விழுப்புரம் மாவட்டத்தில் விழுப்புரம், திண்டிவனம் கல்வி மாவட்டம் என 109 தேர்வு மையங்களில் 11,345 மாணவர்கள், 11,171 மாணவிகள் என மொத்தம் 22,516 பேர் தேர்வு எழுதுகின்றனர்.

இதில் விழுப்புரம் நகரில் உள்ள மையங்களில் கடந்த 9ம் தேதி வேதியியல் பாடப்பிரிவுக்கு பொதுத்தேர்வுகள் நடைபெற்றன. அப்போது மாவட்ட கல்வி அலுவலர்களால் நியமிக்கப்பட்ட நிலையான பறக்கும் படையினர், தேர்வின்போது மாணவ, மாணவிகளை கண்காணித்து வந்தனர். அப்போது விழுப்புரம் நகரில் சில தேர்வு மையங்களில் மாணவர்கள் பிட் அடித்ததை கண்காணிக்க தவறியதாக புகார் மாவட்ட கல்வி அலுவலர் அறிவழகனுக்கு வந்தது.

இதையடுத்து, நிலையான பறக்கும்படை அதிகாரிகள் விசாரணை நடத்தி, 2 ஆசிரியைகள், 3 ஆசிரியர்கள் என 5 ஆசிரியர்களுக்கு விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பியுள்ளனர். மேலும் இந்த ஆசிரியர்கள் முறையான விளக்கம் அளிக்கும்வரை தேர்வு கண்காணிப்பில் ஈடுபடமாட்டார்கள் என தெரிவித்தனர். விசாரணைக்குபின் கல்வித்துறை 5 ஆசிரியர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிகிறது.

## ஒருங்கிணைந்த நவீன கட்டுப்பாட்டு அரை திறப்பு விழா



கிருஷ்ணகிரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த நவீன கட்டுப்பாட்டு அரை திறப்பு விழா மேற்கு மண்டல காவல்துறை தலைவர் சரவணா சுந்தர் IPS கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் தினேஷ்குமார் IAS மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தங்கதுரை M.A கலந்துகொண்டு ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார் இந்த நிகழ்ச்சியில் கிருஷ்ணகிரி மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள் காவல் துணை கண்காணிப்பாளர்கள் காவல் ஆய்வாளர்கள் காவல் உதவி ஆய்வாளர்கள் தலைமை காவலர்கள் மற்றும் காவலர்கள் பலர் கலந்துகொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்







கேஸ் சிலிண்டர் தட்டுப்பாடு, விலை உயர்வை கண்டித்து காமராஜர் நகர் மக்கள் சேவை இயக்கம் சார்பில் சாரம் அவ்வை திடலில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

நடைபெற்று வரும் ஈரான், இஸ்ரேல் அமெரிக்கா போரின் காரணமாக மக்கள் அன்றாடம் பயன்படுத்தக்கூடிய கேஸ் சிலிண்டர் தட்டுப்பாடு ஏற்பட்டு பொதுமக்கள் மிகவும் பாதிக்கபட்டுள்ளனர். மேலும் கேஸ் விலை உயர்வும் அதிகரித்துள்ளது. மேலும் ஹோட்டல்கள், மற்றும் பல்வேறு கடைகள் நடத்த முடியாமலும் இருந்து வருகின்றன. இதனால் ஊழியர்கள் தங்கள் வாழ்வாதாரத்தில் இதில் பெருமளவில் பாதிப்படைந்துள்ளனர். இந்த தட்டுப்பாடு விலை உயர்வுக்கு காரணமான மத்திய மாநில அரசுகளை கண்டித்து காமராஜர் நகர் மக்கள் சேவை இயக்கம் சார்பில் சாரம் அவ்வை திடலில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இயக்க செயலாளர் கோபி தலைமையிலும் தலைவர் நிர்மலா கோபி முன்னிலையில் நடைபெற்ற இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில். காமராஜர் நகர் தொகுதியை சேர்ந்த 200க்கும் மேற்பட்ட பெண்கள் உட்பட பொதுமக்கள் கலந்துகொண்டு அரசுக்கு எதிராக கண்டன கோஷங்கள் எழுப்பினர். தொடர்ந்து இந்தத் தட்டுப்பாடும் விலை உயர்வும் தொடருமேயானால் எங்கள் போராட்டம் அரசுக்கு எதிராக தொடர்ந்து நடைபெறும் எனவும் இயக்கச் செயலாளர் கோபி எச்சரிக்கை விடுத்தார்.

# வில்லியனூர் தொகுதியில் ரூ.19.34 கோடி செலவில் வளர்ச்சிப் பணிகள் எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா தொடங்கி வைத்தார்





புதுச்சேரி, மார்ச். 15–

வில்லியனூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கருப்பட்டி வாய்க்காலில் பொதுப் பணித்துறை நீர்ப்பாசனக் கோட்டம் மூலம் மாதா கோவில் முதல் சீலா ஓடை வரையிலும், கொம்பாக்கம் அம்மன்குளம் முதல் சீலா ஓடை வரையிலும் ரூ. 18.99 கோடி செலவில் பிசிசி வடிகால் கட்டுமான பணி மற்றும் ஒதியம்பட்டு வருவாய் கிராமத்திற்கு உட்பட்ட பெரியபேட் கால்வாயை இணைக்கும் குளூனி பள்ளி சாலையின் குறுக்கே ரூ. 35.62 லட்சம் செலவில் மதகு கட்டும் பணிக்கான பூமி பூஜை நிகழ்ச்சி இன்று காலை நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், எதிர்க் கட்சித் தலைவருமான இரா. சிவா அவர்கள் கலந்து கொண்டு, பிசிசி கட்டுமான பணி மற்றும் மதகு அமைக்கும் பணியினை பூஜை செய்து தொடங்கி வைத்தார்.

இதில், பொதுப் பணித்துறை தலைமைப் பொறியாளர் வீர செல்வம், கண்காணிப்பு பொறியாளர் சுந்தர மூர்த்தி, நீர்ப்பாசனக் கோட்ட செயற்பொறியாளர் ராஜ்குமார், உதவிப் பொறியாளர் மதிவாணன், இளநிலைப் பொறியாளர் ஷியாம், ஊர் முக்கியஸ்தர்கள் குலசேகரன், தர்மராஜ், கலியபெருமாள், திருவேங்கடம், சொக்கலிங்கம், பாலு, பாலகுரு, வேலு, நாகராஜ், வாசு, லட்சுமணன், குப்புராஜி, ராஜேந்திரன், சுந்தரம், நரசிங்கன், ஆனந்த், நாகமுத்து, விநாயகம், சிங்காரவேல், பிரபாகரன், வேலு, மணிகண்டன், திமுக தொகுதி செயலாளர் மணிகண்டன், பொதுக்குழு உறுப்பினர் செல்வநாதன், வர்த்தகர் அணி அமைப்பாளர் ரமணன், ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் செல்வநாதன் என்கிற ஆறுமுகம், தொமுச தலைவர் அங்காளன், துணைத் தலைவர் கதிரவன், துணை அமைப்பாளர்கள் சரவணன், காசிநாதன், தொகுதி துணைச் செயலாளர்கள் ஜெகன் மோகன், அரிகிருஷ்ணன், பொருளாளர் கந்தசாமி, தொகுதி செயற்குழு உறுப்பினர் சுப்ரமணி, இளைஞர் அணி அமைப்பாளர் சபரிநாதன், துணை அமைப்பாளர் சூர்யா, மாணவர் அணி கோபி, பிரேம், கிளைக் கழக நிர்வாகிகள் ராஜ், தேவநாதன், ஜனா, மிலிட்டரி முருகன், பரதன், சுரேஷ், கார்த்தி கேயன், பாலமுருகன், சேகர், கோடிப்பிரகாசம், பெலிக்ஸ், சந்துரு, திருமலை, சுந்தர், மதி, அரவிந்த், ராமு, முத்து, ராஜாராம், கோதண்டம், ஜீவா, ஆறுமுகம், பன்னீர், செபாஸ்டீன், தட்சிணாமூர்த்தி, அருள்மணி, பாண்டியன், அன்பு, அஞ்சாபுலி, நாகராஜ், லோகநாதன், அன்பரசன், அலீஸ்டர், பூபேஷ், ஜெயபால் ஆகியோர் கலந்து கொண்டனர்.



சேலம் மேற்கு மாவட்டம்,நாமக்கல் நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட சங்ககிரி நகராட்சி வார்டு எண் 18,ஆனைக்கல்பாளையம் பகுதியில்,நாமக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.15.30 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய நியாய விலை கடையை,நாமக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் V. S.மாதேஸ்வரன் அவர்களோடு இணைந்து திறந்து வைத்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்த சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம் செல்வகணபதி.

# திருவண்ணாமலை மாவட்டம் ஜவ்வாது மலை கிராம பழங்குடி இன மாணவ மாணவர்களுக்கு கல்வி உதவி... ஈரோடு தயா அறக்கட்டளை நிறுவனத் தலைவர் டாக்டர் என் எம் பிரதீப் நேரில் சென்று வழங்கினார்...

ஈரோடு. மார்ச். 15

திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள ஜவ்வாது மலை பகுதிகளில் வசித்து வரும் பழங்குடியினர் இன மக்களின் குழந்தைகளுக்கு ஈரோடு தயா அறக்கட்டளையின் சார்பில் கல்வி உதவிகள் வழங்கப்பட்டது.

தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு மாவட்டங்களில் இருக்கும் மலை கிராம பகுதிகளில் வசித்து வரும் மலை கிராம பழங்குடியினர் இன மக்களின் குழந்தைகளுக்கு, ஈரோடு தயா அறக்கட்டளை மற்றும் ராசாத்தி அம்மாள் கல்வி அறக்கட்டளை மூலமாக மலை கிராமங்களில் வசிக்கும் மலைவாழ் பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த மக்களின் பள்ளி மற்றும் கல்லூரிகளில் படித்து வரும் மாணவ, மாணவிகளுக்கு பல்வேறு கல்வி நல திட்ட உதவிகளை செய்து வருகிறது.

அந்த வகையில் ஈரோடு மாவட்டத்தில் உள்ள மலை கிராமங்களான, தாளவாடி மற்றும் அதனை சுற்றியுள்ள மலை கிராமங்களை சேர்ந்த மலைவாழ் மக்கள் பழங்குடியினர் இனத்தை சேர்ந்த பள்ளி மற்றும் கல்லூரிகளில் படிக்கும் மாணவ மாணவிகளுக்கும், அதேபோல் பர்கூர் வனப்பகுதிகளுக்கு உட்பட்ட மிக உயரத்தில் இருக்கும் கத்திரி மலை போன்ற





பல்வேறு மலை கிராமங்களில் வசிக்கும் மலைவாழ் பழங்குடியினர் இனத்தை சேர்ந்த மக்களின் பிள்ளைகளுக்கு, ஈரோடு மாவட்ட நிர்வாகம் மற்றும் ஈரோடு மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகம் மூலம் இந்த மலை கிராமங்களில் வசிக்கும் மலை வாழ் மக்கள் பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த பள்ளி மற்றும் கல்லூரி படிக்கும் மாணவ, மாணவிகளின் பள்ளி மற்றும் கல்லூரி படிப்பிற்கு பல்வேறு உதவிகளை சிறப்பாக செய்து வருகின்றது.

இதுபோன்று மலைப்பகுதிகளில் வசிக்கும் மலைவாழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களின் குழந்தைகள் படிக்கும் வழி மாவட்டங்களுக்கும் இத்தகைய கல்வி உதவிகளை செய்ய, கேட்டுக்கொண்டதன் அடிப்படையில், திருவண்ணாமலை மாவட்டம் ஜவ்வாது மலை ஊராட்சி ஒன்றியம், நம்பியம் பட்டு ஊராட்சி, கோவிலான் டூர் பகுதியில் செயல்பட்டு வரும் அரசு உண்டு உறைவிட தொடக்கப்பள்ளியில் பயின்று வரும் மலை கிராம மலைவாழ் பழங்குடியினர் இன மாணவ, மாணவிகளுக்கும் ஈரோடு தயா அறக்கட்டளை மற்றும் ராசாத்தி அம்மாள் கல்வி அறக்கட்டளையின் சார்பில், இந்த அறக்கட்டளைகளின் நிறுவனத் தலைவர் டாக்டர் என் எம் பிரதீப் தலைமையில் அறக்கட்டளையின் நிர்வாகிகள் ஜவ்வாது மலை பகுதிகளுக்கு சென்று அங்கு படிக்கும் மாணவ மாணவிகளுக்கு பல்வேறு கல்வி உதவிகள் மற்றும் நலத்திட்டங்களை வழங்கினார்கள்.

இதற்கான ஏற்பாடுகளை ஈரோடு தயா அறக்கட்டளை மற்றும் ராசாத்தி அம்மாள் கல்வி அறக்கட்டளை சார்பில் அதன் தலைவர் டாக்டர் என் எம் பிரதீப் சிறப்பாக செய்திருந்தார்.

இந்தக் கல்வி உதவிகள் வழங்கும் விழாவில் கலந்து கொண்ட மலைவாழ் பழங்குடியினர் இன மக்களும் திருவண்ணாமலை மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்கோட்டையினர் நலத்துறை அதிகாரிகளும், கல்வி அலுவலர்களும் நன்றி கூறி பாராட்டு தெரிவித்தனர்.

# பேரம்பாக்கம் ஊராட்சியில் ரூ.2.49 கோடி மதிப்பீட்டில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப், திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.இராஜேந்திரன் ஆகியோர் திறந்து வைத்தார்

திருவள்ளூர் மார்ச் 15 :

திருவள்ளூர் மாவட்டம், கடம்பத்துூர் ஊராட்சி ஒன்றியம் பேரம்பாக்கம் ஊராட்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை சார்பில் ரூ.2.49 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப், திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.இராஜேந்திரன் ஆகியோர் திறந்து வைத்தனர்.

பேரம்பாக்கம் ஊராட்சியில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறைக்கு அரசு ஆரம்ப சுகாதார நிலையம் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் 3778 சதுர அடி பரப்பளவிலும், வட்டார சுகாதார நிலையம் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் 1284 சதுர அடி பரப்பளவிலும், வளாகத்தின் சுற்றுச்சுவர் ரூ.36.05 இலட்சம் மதிப்பீட்டிலும், ஃபேவர் பிளாக் சாலை ரூ. 13.38 இலட்சம்





மதிப்பீட்டிலும் ஆக மொத்தம் ரூ.2.49 கோடி மதிப்பீட்டில் 19,536 சதுர அடி பரப்பளவில் ஒருங்கிணைந்த சுகாதார நிலையம் மற்றும் வட்டார பொது சுகாதார நிலையம் கட்டப்பட்டுள்ளது. இதில் தரைத்தளத்தில் அனைத்து அடிப்படை வசதிகளுடன் பொதுமக்கள் எளிதாக அணுகி சிகிச்சை பெற்றுக்கொள்ளும் வகையில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் கட்டப்பட்டுள்ளது. முன்னதாக, மாவட்ட ஆட்சியர் மற்றும் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் ஆகியோர் பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கி, அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்களுடன் குழு புகைப் படம் எடுத்துக் கொண்டனர்.

அதனைத்தொடர்ந்து, காக்களூர் ஊராட்சி காக்களூர் ஏரி பகுதியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ரூ.2.51 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டு வரும் நிறைவு பணிகளை மாவட்ட ஆட்சியர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு மீதமுள்ள பணிகளையும் துரிதமாக முடிக்க வேண்டும் என சம்பந்தப் பட்ட துறை அலுவலர் களுக்கு உத்தரவிட்டார்.

இதில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்கு நரும் இணை இயக்குநருமான வை. ஜெயக்குமார், செயற் பொறியாளர் (ஊரக வளர்ச்சி) எஸ். தணிகாச்சலம், உதவி இயக்குநர் ஊராட்சிகள் மற்றும் தணிக்கை (மத்திய) கே.எஸ்.யுவராஜ், கடம்பத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் நடராஜ் (கி.ஊ), சௌந்தரி (வ.ஊ), வட்டார மருத்துவ அலுவலர் லட்சுமி, திருவள்ளூர் வட்டார வளர்ச்சி அலுவலர் ந.இளங்கோவன், உதவி செயற்பொறியாளர் கோவேந்தன், திருவள்ளூர் வட்டாட்சியர் பாலாஜி, உதவி பொறியாளர் மற்றும் பல்துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# சேலத்தில் விஏஓ உறவினர் விஏஓ ஆபீசுக்கு ஆசையோடு போன போது பெரிய ட்விஸ்ட்.

சேலம். மார்ச். 15–


சேலம் மாவட்டம் மேட்டூர் அருகே உள்ள குஞ்சாண்டியூரை சேர்ந்தவர் இளங்கோ என்பவர் பெட்ரோல் விற்பனை நிலையம் நடத்தி வருகிறார்.

இவருடை தந்தை பெயரில் நிலம் உள்ளது. இதற்கு பட்டா பெற இளங்கோ முடிவு செய்தார்.இதற்காக நவப்பட்டி கிராம நிர்வாக அலுவலரிடம் பட்டா கேட்டுள்ளார். அவர் பட்டா வழங்க 14 ஆயிரம் லஞ்சம் கேட்டாராம்.இந்த விவாகரத்தில் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் அவரது உறவினரை லஞ்ச ஒழிப்பு போலீசார் கையும் களவுமாக பிடித்து கைது செய்தனர்.

சேலம் மாவட்டம் மேட்டூர் அருகே உள்ள குஞ்சாண்டியூரை சேர்ந்த 55 வயதாகும் இளங்கோ என்பவர் அந்த பகுதியில் பெட்ரோல் விற்பனை நிலையம் நடத்தி வருகிறார். இவருடைய தந்தை சுப்பிரமணிக்கு விவசாய நிலம் உள்ளது. இந்த நிலத்திற்கு இளங்கோ பட்டா பெற முடிவு செய்தார். இதையடுத்து இளங்கோ விவசாய நிலத்திற்கு பட்டா கேட்டு, நவப்பட்டி கிராம நிர்வாக அலுவலர் பாக்கியராஜ் (35) என்பவரிடம் விண்ணப்பித்தார். அதற்கு அவர் பட்டா வழங்க ரூ.14 ஆயிரம் லஞ்சம் கேட்டதாக கூறப்படுகிறது.

ஆனால் லஞ்சம் கொடுக்க விரும்பாத இளங்கோ நேற்று முன்தினம் சேலம் லஞ்ச ஒழிப்பு போலீசில் புகார் கொடுத்தார். இதையடுத்து கிராம நிர்வாக அலுவலரை கையும், களவுமாக பிடிக்க லஞ்ச ஒழிப்பு போலீசார், ரசாயன பவுடர் தடவிய ரூ.14 ஆயிரத்தை இளங்கோவிடம் கொடுத்து அனுப்பி வைத்தனார்கள்..

தொடர்ந்து லஞ்ச ஒழிப்பு போலீசார் நேற்று நவப்பட்டி கிராம நிர்வாக அலுவலக பகுதியில் மறைந்திருந்தனர். அப்போது



பெட்ரோல் பங்க் உரிமையாளர் இளங்கோ ரூ.14 ஆயிரம் லஞ்ச பணத்தை கிராம நிர்வாக அலுவலர் பாக்கியராஜிடம் கொடுக்க வந்துள்ளார். பணத்தை அங்கு உள்ள தனது உறவினர் ஜெகதீஷ் குமாரிடம் கொடுக்கும்படி பாக்கியராஜ் கூறியிருந்தாராம் இதையடுத்து ஜெகதீஷ்குமார் பணத்தை பெற்று கொண்டார். அப்போது அங்கு மறைந்திருந்த போலீசார் ஜெகதீஷ் குமாரை லஞ்ச பணத்துடன் பிடித்து விசாரணை நடத்தினர். பாக்கியராஜ் கூறியதால் பணம் வாங்கியதாக அவர் தெரிவித்து உள்ளார். இதைத்தொடர்ந்து லஞ்சம் வாங்கிய கிராம நிர்வாக அலுவலர் பாக்கியராஜ், அவருடைய உறவினர் ஜெகதீஷ்குமார் ஆகிய 2 பேரையும் போலீசார் கைது செய்தனர். 14 ஆயிரம் லஞ்சம் வாங்கிய வழக்கில் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் அவரது உறவினர் ஆகியோர் கையும் களவுமாக கைது செய்யப்பட்ட சம்பவம் சேலம் பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

விவசாய நிலத்திற்கு பட்டா வாங்குவதற்கு லஞ்சம் தர தேவையில்லை... ஆன்லைன் மூலமாகவே எளிமையாக வாங்கலாம். பட்டா விண்ணப்பிக்கும் முன் நிலம் உங்கள் பெயருக்கு மாற்றப்பட்டதற்கான பதிவு செய்யப்பட்ட பத்திர நகல், அந்த நிலத்திற்கு ஏற்கனவே இருந்த பட்டா, சமீபத்திய வில்லங்கச் சான்றிதழ் (நிலம் உங்கள் பெயரில் இருப்பதை உறுதி செய்ய), ஆதார் கார்டு, பான் கார்டு அல்லது வாக்காளர் அடையாள அட்டை ஆகியவை வேண்டும்.நிலம் வாரிசு அடிப்படையில் கிடைப்பதாக இருந்தால் வாரிசுச் சான்றிதழ் அவசியம் ஆகும்.

தமிழக அரசின் eservices.tn.gov.in என்ற இணையதளத்தில் நீங்களே விண்ணப்பிக்கலாம். அல்லது அருகிலுள்ள இசேவை (e-Sevai) மையத்திற்குச் சென்று அவர்களிடம் மேற்கண்ட ஆவணங்களை தந்து விண்ணப்பிக்கலாம். ஆன்லைன் விண்ணப்பத்திற்கு மிகக் குறைந்த அளவிலான கட்டணமே வசூலிக்கப்படும் (சுமார் ரூ.60 ரூ.100 வரை).

நீங்கள் ஒரு நிலத்தின் ஒரு பகுதியை மட்டும் வாங்கியிருந்தால், அந்த நிலத்தை அளந்து புதிய உட்பிரிவு செய்ய வேண்டியதிருக்கும். இதற்கு ஆன்லைனில் விண்ணப்பிக்கும்போதே 'உட்பிரிவுடன் கூடிய பட்டா மாறுதல்' என்பதைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இதற்கு அரசு நிர்ணயித்துள்ள அளவீட்டுக் கட்டணத்தைச் செலுத்த வேண்டும். பிறகு நில அளவையாளர் வந்து நிலத்தை அளந்து பிரிப்பார்.

பின்னர் நீங்கள் சமர்ப்பித்த ஆவணங்களை கிராம நிர்வாக அலுவலர் சரிபார்ப்பார். அவர் தனது பரிந்துரையை வருவாய் ஆய்வாளருக்கு (RI) அனுப்புவார். அதனை வட்டாட்சியர் அங்கீகரிப்பார். பட்டா தயாரானதும் உங்கள் மொபைல் எண்ணிற்கு குறுஞ்செய்தி வரும், நீங்கள் ஆன்லைனிலேயே பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும். இதில் யாருக்கும் ஒரு ரூபாய் கூட லஞ்சம் தர தேவையில்லை. லஞ்சம் கேட்டால் மாவட்ட லஞ்ச ஒழிப்பு போலீசில் புகார் அளிக்கலாம். அவர்கள் உறுதியாக நடவடிக்கை எடுப்பார்கள்.

# கேம்ஃபோர்ட் சர்வதேச பள்ளி சார்பாக நிலவைத் தொடும்' உத்வேகச் சிலை திறப்பு விழா!!



கோவை மார்ச்:15

கோவையின் முக்கியப் பகுதியான ரேஸ்கோர்ஸ் காஸ்மோபாலிட்டன் கிளப் சந்திப்பு அருகே ,மாணவர்களின் லட்சியக் கனவுகளைப் பிரதிபலிக்கும் வகையிலான பிரம்மாண்டமான (Dream Beyond) எனும் கருத்துரு சிலைதிறக்கப்பட்டுள்ளதுதி கேம்ஃபோர்ட் இன்டர்நேஷனல் பள்ளி சார்பில் அமைக்கப்பட்ட இந்தச் சிலை திறப்பு

விழாவில் கோவை மாவட்ட ஆட்சியர் பவன் குமார் கிரியப்பனவர் மற்றும் கோவை மாநகராட்சி ஆணையர் சிவகுரு பிரபாகரன், ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டு சிலையை திறந்து வைத்தனர்.

உலக உருண்டையின் மீது நின்றுகொண்டு, இரண்டு சிறுவர்கள் ஒரு கயிற்றின் மூலம் நிலவைத் தங்களை நோக்கி இழுப்பது போல் எல்லைகளை தாண்டி கனவு காணுங்கள் எனும் கருத்துருவோடு இந்தச் சிலை கலைநயத்துடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. இது கடின உழைப்பு, விடாமுயற்சி மற்றும் எல்லைகளைத் தாண்டிச் சாதிக்கும் மனப்பான்மையைக் குறிக்கிறது.

இது குறித்து கேம்ஃபோர்டு சர்வதேச பள்ளித் தலைவர் அருள் ரமேஷ் மற்றும் தாளாளர் பூங்கோதை அருள் ரமேஷ் ஆகியோர் கூறுகையில், அறிவாற்றல்,மன உறுதி மற்றும் நற்பண்புகள் இருந்தால் எட்ட முடியாத கனவு என்று எதுவுமே இல்லை என்பதை மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் உணர்த்துவதே இச்சிலையின் நோக்கம்" எனத் தெரிவித்தனர்.

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421